2nd November 1962]

காங்கிரஸ்காரர் என்பதும், அவர் பேரில் வழக்குத் தொடரப்பட்டு, அந்த வழக்கு தள்ளப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸார் அத்து மீறி நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்று கனம் அங்கத்தினர் வேண்டுமானால் நினைத்துக்கொள்ளலாம், பிரசாரம் செய்யலாம். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அது உண்மை அல்ல. அவர்கள் கேட்கும் மற்றத் தகவல் பற்றி என்னிடம் ஒன்றும் இல்லை.

* 1086 *Q.*—Sri J. MATHA GOWDER : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Government Officials who have availed leave on 19th July 1962 (inclusive of N.G.Os., Police Officers and teachers);

(*b*) the number of N.G.Os. who were arrested for taking part in the picketing organized by the D.M.K. on that date; and

(*c*) the action taken against the officials who were so arrested?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The exact number of Government servants who availed themselves of casual leave on 19th July 1962 is not available.

However the cases of all those who were on casual leave have been scrutinised, and Government have satisfied themselves that their absence was for bona fide reasons.

(*b*) & (*c*) Three N.G.G.O's were arrested for picketing on that date, all of them in Madras City. One of these was a Binder in the Press, the second an attender and the third a member of a work-charged establishment. The first two were convicted and released under the Madras Probation of Offenders Act, and they have been placed under suspension pending disposal of the disciplinary proceedings which have been instituted against them. The third person was convicted and sentenced to two months R.I. He has since resigned and is no longer in service.

Madras Co-operative Societies Act

* 1087 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state when the Government propose to issue the notification under section 1, sub-section 3 of the Madras Co-operative Societies Act, 1961?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The draft rules to be framed under the Madras Co-operative Societies Act, 1961 are under consideration. The Notification under sub-section 3 of section 1 will be issued as soon as the draft rules are finalised.

[2nd November 1962

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தச் சட்டம் நிறைவேற்றிய பிற்பாடு ஒரு வருஷத்திற்கு மேல் ஆகியும், விதிகள் இயற்று வதற்கு இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : ரொம்ப நல்ல முறையிலே, நுணுக்கமான முறையிலே சட்டத்தை அணுக வேண்டிய சிரமங்கள் இருக்கின்றன. அதற்கு விதிகள் இயற்றுவது பற்றி நல்ல முறையில் பரிசிலனை நடந்துகொண்டிருக்கிறது. அநேகமாக அது முடிவுக்கு வரும் நிலையில் இருக்கிறது. ஆகவே கூடிய சீக்கிரம் விதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

கூட்டுறவு விவசாய பாங்குகள்

** 1088 கேள்வி.*—**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கூட்டுறவு விவசாய பாங்குகளை ஆரம்பிக்க உத்தேச முண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : இல்லை, ஐயா.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தமிழ் நாட்டில் இன்று இருக்கும் கிராம கூட்டுறவு சங்கங்களைவிட விவசாய பாங்குகள் செவ்வனே நடைபெற்று வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படி யிருந்தால், மத்திய அரசாங்கத்தினிடம் மீண்டும் வற்புறுத்தி, தமிழ் நாட்டில் விவசாய கூட்டுறவு பாங்குகள் அமைக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : நமது தமிழ் நாட்டில் இப்பொழுது 330 விவசாய பாங்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதற்குமேல் அதிகப்படுத்தப்போவதில்லை. முதலில் மத்திய அரசாங்கம் விவசாய பாங்குகள் அமைக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆனல் இப்பொழுது அப்படிச் செய்யத் தேவையில்லை என்று கருதி அதற்கு மேல் அதிகமாக விவசாய பாங்குகள் ஏற்படுத்த வேண்டாம் என்று நிறுத்திவிட்டு, கிரெடிட் சொஸைடிகளாக மாற்றிக்கொண்டு வருகிரேம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : விவசாய பாங்குகள் நல்ல முறை யிலே வேலை செய்து விவசாயிகளுக்கு உதவுகின்ற காரணத்தினல், மேலும் சில பாங்குகளாகிலும் திறக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். அப்படி திறக்கிற சமயத்தில் பன்ருட்டியில் ஒரு விவசாய பாங்கு ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : இப்பொழுது விவசாய பாங்குகள் எங்குமே திறக்கப் போவதில்லை என்று நான் முதலில் சொன்னேன். அதை கனம் அங்கத்தினர்